[28th January 1972

திரு. கே. ராஜாராம்: இந்த அபிப்ராயத்தை நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் வற்புறுத்த அரசாங்கம் எண்ணியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்.டி..சி.—யில் அரசாங்கத்தின் சார்பாக வலியுறுத்துவதாக இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நாடாளு மன்றத்தில் திரு. மாறன் இதனையொட்டி ஒரு தீர்மானத்தைக் கொடுத்தார். ஆனால் மூன்றில் இரண்டு பங்கு அதற்கு வாக்குகள் வேண்டுமென்ற அளவில் அந்தத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது என்றாலும் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசியல் சட்ட 82-வது பிரிவின்படி சென்சஸ் எடுத்து முடிந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மறுபடியும் அந்தக் கணக்கை வைத்து அடுத்த தேர்தலை நடத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. 82-வது பிரிவில் இருக்கிற வரையில் 1951-ம் ஆண்டு சென்சசை வைத்து எப்படி இடம் ஒதுக்க முடியும் என்று முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது முடியாது, திருத்தம் தேவை என்பதற்காகத்தான் 1951-ம் ஆண்டுக் கணக்கை வைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறோம். இப்படி ஆண்டுக்கு ஆண்டு தமிழ் நாட்டைப் போன்று மற்ற மாநிலங்கள் குடும்பநலத் திட்டத்தினைத் தீவிரமாக அமல்படுத்தி ஒரு புறத்தில் திட்டத்தில் வெற்றி கண்டு, ஒரு புறம் நாடாளுமன்றத்தில் இடம் இழப்பது நல்லதல்ல. இந்த நிலைமையை உணர்ந்து மத்திய அரசு செயல் படுமென்று நம்புகிறோம்.

திரு. கே. ராஜாராம்: இதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தவறினால் குடும்ப நலத் திட்டத்தை உற்சாகத்துடன் நிறைவேற்றுவதில் குறைகள் ஏற்படும், பாதிக்கும் என்று மத்திய அரசிற்கு மாநில அரசு எடுத்துக் கூறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குடும்பநலத் திட்டம் என்பது இந்தியா முழுமைக்கு என்றாலும் அதைத் தமிழ் நாடு வெற்றிகரமாக நிறை வேற்றுவதன் காரணமாக இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விடத் தீவிர மாக அமல்படுத்துகிறது. அதன் பலனை நல்ல முறையில் அனுபவிப்பதற்கு இங்கே குடும்ப நலத் திட்டம் நல்லமுறையில் செயல் பட்டால்தான் முடியும். நாட்டின் வளத்தைப் பெருக்கும் அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் இடத்தை இழக்க நாம் தயாராக இல்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: 1971 கணக்கின்படி வந்தால் நாடாளு மன்றத்தில் எவ்வளவு இடத்தை நாம் இழக்க நேரிடும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இழக்க இருக்கிறோம் என்றால், இழப்பதற்குத் தயாராகிவிட்டோம் என்று பொருள். இழக்க நேரிடலாம் ஓர் இடத்தை. அதையும் இழக்காமல் இருப்பதற்கு நாம் வாதிடுவோம்.

Cashew Liquor

* 38 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are any proposals to start a Cashew Liquor Unit at Panruti; and

(*b*) if so, the details thereof?

28th January 1972]

முந்திரிச் சாராயம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ருட்டியில் முந்திரிச் சாராயம் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கு செயற்குறிப்புகள் ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) முந்திரிப் பழங்களிலிருந்து அருந்தத்தக்க மதுவினை பண்ருட்டியில் தயாரிப்பதற்கு தங்களுக்கு அனுமதி வழங்குமாறு இதுவரை இருவர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர் :—

1. திருவாளர்கள் அருணா சுகர்ஸ் லிமிடெட், சென்னை.
2. திரு. எ. டி. சில்வா, சென்னை.

இவர்களது வேண்டுகோள்பற்றி வருவாய்த்துறை (ஆயத்தீர்வை-மதுவிலக்கு) வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கந்தர்வக் கோட்டை வழியாகப் புதுக்கோட்டை போகும் பாதையில் முந்திரிக் காடுகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் முந்திரிச் சாராயத்தைத் தயாரிப்பதற்கு அரசு வழிமுறைகளை ஆராயுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கான விண்ணப்பம் அனுப்புவதற்கு உறுப்பினர் முன்வந்தால் பரிசிலிக்கப்படும்.

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, முந்திரிச் சாராயத் தொழிற்சாலையை அரசே நடத்தி அதன் மூலமாக வருமானத்தைப் பெறுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு நடத்துகிற அளவுக்கு இதில் அரசு முந்திரிக் கொட்டையாக இருக்க விரும்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : முந்திரியிலிருந்து பென்னி என்ற பானத்தைத் தயார் செய்து கோவாவில் நிறைய விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் இதை விரும்பமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, முதலமைச்சர் கருத்து என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அனுபவம் இல்லை.

Skin and Hides Market

* 40 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that the skin and hides market was paralysed in this State during the last week of August, 1971; and

(*b*) if so, the reasons therefor ?